செய்தி வெளியீடு எண்: 12          நாள்: 5.5.17

**பத்திரிக்கை செய்தி**

---

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களுக்கும் புதிய ஸ்மார்ட் கார்டு (மின்னணு குடும்ப அட்டை) வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை **8,42,210** POS இயந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதில் **3,20,023** ஸ்மாாட் கார்டு அட்டைகள் அச்சடித்து வரப்பெற்று இது வரை (05.05.2017) **2,27,681** ஸ்மார்ட் கார்டுகள் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இந்நேர்வில் ஸ்மார்ட் கார்டு அச்சடிக்க இயலாத காரணமாக கருதப்படுவைகளான குடும்ப அட்டைதாரர்களின் புகைப்படம் இல்லாத நிலை மற்றும் தகவல் தரவு தொகுப்பு விவரங்கள் (சுய விவரங்கள்) பதிவேற்றம் செய்யப்படாமல் **1,15,348** குடும்ப அட்டைகளின் பட்டியல் வரப்பெற்று மேற்படி பட்டியல் அந்தந்த வட்டங்களுக்குட்பட்ட நியாய விலை கடை மூலம் சரி செய்ய வழங்கப்பட்டுள்ளது.

இது வரை **18,518** புகைப்படங்கள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதம் **96,830** பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, பட்டியலில் கண்டவாறு புகைப்படம் பதிவுசெய்யப்படாத பொதுமக்கள் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு சென்று தங்களது புகைப்படம் பதிவேற்றம் செய்யும் சிறப்பு முகாம்களில் **(06.05.2017 முதல் 10.05.2017 வரை)** கலந்து கொண்டு தங்களது புகைப்படம் பதிவேற்றம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம்)
மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.